# சுயதொழில் மூலம் சாதித்துக் காட்டிய தொழில் முயற்சியாளர் சனாலி







வாழ்க்கையை வாழ்வதற்காக மனிதர்கள் செய்யும் முயற்சிகள் ஏராளம். திறன்கொண்ட சில பெண்கள் குறைந்த பணத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய உள்நாட்டு மூலப்பொருட்களைக் கொண்டு தமது குடும்ப வருமானத்தை பலப்படுத்திக் கொள்கின்றனர்.

ஆறு வருடங்களுக்கு முன் மாத்தளை மாவட்டத்தின் கலேவல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வஹகோட்டை என்னும் கிராமத்தில் நாலிந்த சந்திரபாலவின் மனைவியான சனாலி, அவருடைய வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிபெற தனது கணவருடன் இணைந்து வெள;வேறு தொழில்களில் ஈடுபட்டார் மன தைரியத்துடன். ஆனால் அவை எந்தவொரு இலாபமும் பெரிதாக ஈட்டித்தரவில்லை. அதனால் அவளது குடும்பப் பொருளாதாரமே சிதறிப்போனது. எப்படியாவது பொருளாதார ரீதியில் உயர்வதற்கு நினைத்த சனாலி, தனது சுய முயற்சியால் எந்தவொரு பயிற்சியும் இன்றி துணி, வெள;வேறு உபகரணங்கள் மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்களைக் கொண்டு புத்தருக்கு படைக்கக்கூடிய பூக்களை செய்தார்.

ஆரம்பத்தில் அந்தப் பூக்கள் ரூ. 100க்கு விற்கப்பட்டன. சனாலி வீட்டிலிருந்தே இப்பூ வியாபாரத்தை மேற்கொண்டார். அதற்கு பக்கபலமாக நாலிந்தவும் வீடு வீடாகச் சென்று சனாலி செய்த பூக்களை விற்று வந்தார். காலங்கள் கடந்து போக சனாலியின் உற்பத்திக்கு நாளுக்கு நாள் கேள்வி கூடியது. அதில் வந்த வருமானத்தால் குடும்ப பொருளாதாரம் ஓரளவுக்கு உயர்ந்து செல்கையில் சனாலியின் மனம் வேறு உற்பத்திகளில் ஈடுபடத் தூண்டியது.

அத்துடன் தனது கணவரின் உதவியுடன் மேலதிகமாக கம்பளம், முத்துக்குடை என்பனவற்றையும் செய்வதற்கு சனாலி முயற்சித்தாள். அதற்கு அவசியமான துணி, வெள;வேறு பொருட்கள் மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்கள் மட்டுமன்றி பனை ஓலைகளை தேடிப் பெற்றுக் கொள்வதும் அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கவில்லை. இருந்தாலும் கணவரின் துணையுடன் தேவையான பொருட்களை தேடிக் கொண்டார். முதலில் முத்துக்குடை செய்வதற்கு கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் ஆகின. இரவு, பகல் பாராது செய்த இப் படைப்புகளை முதலில் புத்தரின் முன்வைத்து வழிபாடு செய்தார். இவற்றின் விற்பனை வெகு உயர்ந்த மட்டத்தில், பொருளாதார ரீதியில் வெற்றி தரும் என இருவரும் நினைத்திருந்தனர். ஏனென்றால் பௌத்தர்களுக்கு இவை புனிதமானவை, அவசியமானவை என்பதால்.

இவ்வாறு ஆரம்பமான இக்கைத்தொழிலைச் செய்வதற்கு வேறு உதவியாளர்களையும் சேர்த்துக் கொண்ட அவள், அவர்களுக்கு தன்னால் முடிந்த அளவுக்கு சாதாரண கூலியும் கொடுத்தார். இவ்வாறு இவர் போன்ற சிரமப்படுகின்ற வேறு குடும்பங்களின் பொருளாதாரத்தை உயர்த்தவும் அவரால் முடிந்தது. அத்துடன் இப் படைப்புகளை உருவாக்கத் தேவையான மூலப்பொருட்களை விநியோகிப்பவர்களை தேடிச்சென்று அவர்களுக்கான சரியான விலைகளைப் பெற்றுக் கொடுத்தார். சரியான விலையும், தரமும் இருந்தபடியால் விற்பனை சந்தையில் எந்தப் பிரச்சினையும் வரவில்லை.

கம்பளங்களின் விலை நீளத்துக்கு ஏற்ப வேறுபட்டது. தற்போதைக்கு முத்துக்குடை, தட்டு மற்றும் கம்பளங்களின் விலை ரூ. 300, ரூ. 450, ரூ. 1000 என்ற முறையில் சந்தையில் விநியோகிக்கப்படுகிறது. அவற்றின் அமைப்பு மற்றும் அலங்கார அடிப்படையிலும் விலைகள் மாறுபடும். அத்துடன் 10 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கியதுடன் வாடகைக்கு பெற்ற தையல் இயந்திரங்களை தமது வீட்டிலேயே வைத்து வேலையைத் தொடர்ந்தார். சனாலி தனது பிள்ளைகளின் கல்வியிலும் கவனம் எடுக்கத் தவறவில்லை. பல வேலைப்பளுவுக்கு மத்தியிலும் தனது பிள்ளைகளின்

தேவைகளை தனக்கு கிடைக்கும் வருமானத்தின் மூலம் நிறைவேற்றினாள்.

எதிர்பாராதவிதமாக கொவிட் - 19 தொற்று ஏற்பட்டதன் காரணமாக இக்கைத்தொழிலுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டது. இருந்தாலும் அவள் வீழ்ந்து போகவில்லை. முடிந்தவரை தனது முயற்சியால் தொழிலை தொடர்ந்தும் நடத்தி வந்தார். முன்பு போல மூலப்பொருட்கள் கிடைப்பதில் பிச்சினைகள் ஏற்பட்டது. இக்கைத்தொழில் வீழ்ச்சியடைவதை விரும்பாத சனாலி தனது எதிர்காலம் கருதி வெளிநாடு செல்ல முடிவெடுத்தார். இதன்மூலம் கிடைக்கின்ற பணத்தைக் கொண்டு இக்கைத்தொழிலை முன்னேற்றலாம் என்ற நோக்கத்துடன் இற்றைக்கு 6 மாதங்களுக்கு முன்பு வீட்டு வேலைக்காக வெளிநாட்டுக்குப் புறப்பட்டார்.

சனாலியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் இக்கைத்தொழிலை பெரும் வெற்றியுடன் நாலிந்த நடாத்திச் செல்கின்றார். சனாலியின் வீட்டிற்கு வந்து வேலை செய்தவர்கள் தத்தமது வீடுகளில் இருந்தபடியே இக்கைத்தொழிலை செய்து வருகின்றனர். இதிலுள்ள அலங்கார வேலைப்பாடுகள் மற்றும் உற்பத்தித் தரம் என்பன சிறப்பாக இருப்பதால் சந்தையில் இதற்கான கேள்வி குறையவில்லை என்கிறார் கணவர் நாலிந்த. விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு விட்டது என்றும் நாலிந்த கூறுகிறார்.

முத்துக்குடைக்கும், தட்டுக்குமே பெரும் கேள்வி சந்தையில் காணப்படுகிறதாம். சுயமுயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட இத் தயாரிப்புகளை தமது சொந்தக் கடையில் விற்கவும், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வேலை வழங்குவதுமே சனாலியின் நோக்கமாக இருந்தது. எத்தனை தடைகள் வந்தாலும் தளராமலும் தனது முயற்சியை கைவிடாமலும் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றிபெறும் சக்தியை மகளிர் தன்னுள் கொண்டுள்ளனர் என்பதை சனாலி உலகத்துக்கே தன் அனுபவத்தின் ஊடாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

தில்ஹானி டயஸ்,
(மத்திய மாகாணம்)

(இக்கட்டுரையில் காணப்படும் கருத்துகள் மற்றும் விவரங்களுக்கு காமனி கொரயா நிதியம் எவ்வகையிலும் பொறுப்பேற்காது).